Previous Examination : Date : 03.11.2020

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு மே மாதம் 26-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 44 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரேம்குமார் | வயது | 25 /2022 |
| தகப்பனார் பெயர் | பாஸ்கரன் | ஜாதி | |
| தொழில் | தொழிற்பயிற்சி பெற்று வருகிறேன். | மதம் | |
| ஊர் | காட்டூர் | தாலுக்கா | திருவாரூர் |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம், காட்டூரில் வசித்து வருகிறேன். ஐ.சி.எப்.-ல் தொழில்பயிற்சி பெற்று வருகிறேன். 1வது எதிரி சக்திவேலை தெரியும். 2018 ம் வருடம் பிப்ரவரி மாதம் 1வது எதிரி கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாகவும், ஆபீஸ் அஸிஸ்டெண்ட் வாங்கி தருவதாகவும், அவரது வீட்டில் கோர்ட்டில் வேலை செய்பவர் இருப்பதாகவும், அவர் ஜட்ஜ்க்கு உறவினர் என்றும், திருவாரூரில் வேக்கண்ட் உள்ளது என்றும் சொல்லி ரூ.1லட்சம் பணம் வாங்கினார். அந்த பணத்தை நான் 1வது எதிரி வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது எனது தகப்பனாரும், 1வது எதிரியின் தாயாரும், 1வது எதிரியின் மனைவியும் உடன் இருந்தார்கள். 1 மாதத்தில் வேலை வாங்கி தருவதாக சொல்லியிருந்தார். பணம் வாங்கியதற்கு ரூ.20/-பத்திரத்தில் எழுதியும் கொடுத்தார். 2 மாதம் ஆகியும் வேலை வாங்கி கொடுக்கவில்லை. எனவே பணத்தை திரும்ப கேட்டேன். பணத்தை கோர்ட்டில் வேலை வாங்குவதற்காக கொடுத்துள்ளதாக சொன்னார். 3 மாதம் வெயிட் செய்யுமாறு சொன்னார். எஸ்.பி. ஆபீஸிலிருந்து எனக்கு போன் செய்து நீங்கள் பணம் கொடுத்து ஏமாந்துள்ளீர்களா என்று கேட்டார்கள். அதன்பிறகு எஸ்.பி.ஆபீஸில் வந்து பார்த்தபோது சுரேஷ் என்பவர் என்னை போல் பணம் கொடுத்து இருந்து புகார் கொடுத்த விபரம் தெரியவந்தது. அதன் பின்னர்தான் 83 பேர் பணம் கொடுத்து ஏமாந்த

விபரம் தெரியவந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (1வது எதிரி தரப்பில்)**

நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுத்தேனா என்றால் ஏற்கனவே புகார் கொடுத்திருந்ததால் என்னை தனியாக கொடுக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். எங்கள் சாட்சிகளாக சேர்த்துக்கொள்வதாக சொன்னார்கள். சுரேஷ் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் சுரேஷ் என்பவரை பார்த்ததில்லை. அவரிடம் நான் பேசியதும் இல்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்துதான் முதன்முறையாக எனக்கு போன் வந்தது என்றால்சரிதான். நான் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தபோது எனது அப்பா பாஸ்கர், எனது அண்ணன் மணிகண்டன் மற்றும் சகோதரர் சின்னபிள்ளை ஆகியோரும் இருந்தார்கள். எனக்கு சின்னபிள்ளை என்பவர் மூலம்தான் 1வது எதிரி வேலை வாங்கி கொடுப்பதாக சொன்ன விபரம் தெரியவந்தது. 1வது எதிரி இயற்கை அங்காடி வைத்து நடத்தி வருகிறார். 1வது எதிரி அரசுப்பணி எதிலும் இல்லை என்றால் சரிதான். 1வது எதிரி அரசு பணியில் இல்லாதநிலையில் எப்படி எனக்கு வேலை வாங்கி தருவார் என நான் நம்பினேன் என்றால் 1வது எதிரி அப்பாட்மெண்ட்டில் கோர்ட்டில் வேலை செய்யும் ஒரு லேடி குடியிருப்பதாவும், அவர் ஜட்ஜ்க்கு உறவினர் என்றும், அவர் திருவாரூர் கோர்ட்டில் வேலை பார்ப்பதாகவும், 1வது எதிரி சொன்னதால் நம்பினேன். 1வது எதிரியிடம் நான் போய் பணத்தை கேட்டபோது பணத்தை 1வது எதிரி அவரது வீட்டிலகுடியிருக்கும் லேடியிடம் கொடுத்துள்ளதாகவும்,அதனை அவர் ஜட்ஜியிடம் கொடுத்துள்ளதாகவும் சொன்னார். 83 நபர்கள் பணம் கொடுத்துள்ளதாக நான் சொல்லும் விபரம் எனக்கு தெரியும் என்றால் எஸ்.பி. ஆபீஸில் போய் நானும் கம்ளைண்ட் கொடுக்கலாமா என்று கேட்டபோது ஏற்கனவே கம்ளைண்ட்கொடுத்துள்ளார்கள் என்றும், 83 நபர்கள் பணம் கொடுத்துள்ளதாக அவர்கள் சொன்னார்கள். 1வது எதிரியும் பணம் கொடுத்து ஏமாந்து உள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது- நான் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தேன். 1வது எதிரி 12.03.2019 ம் தேதி புகார் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியாது. 1வது எதிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்ததை மறைத்து 2வது எதிரி நீதிமன்றத்தில்பணிபுரிவதால் அச்சப்படடு 1வது எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு யார் 20 ரூபாய் பத்திரத்தில் எங்கு வைத்து எழுதி கொடுத்தார்கள் என்றால், 1வது எதிரி அவரது வீட்டிற்கு அருகில் உள்ள புரௌவுசிங் சென்டருக்கு அழைத்து போய் 20 ரூபாய் பத்திரத்தில் தயார் செய்து கையெழுத்து போட்டு கொடுத்தார். அப்போது சின்னபிள்ளை என்பவரும் உடன் இருந்தார். 1வது எதிரி 20 ரூபாய் பத்திரத்தில் எழுதி கொடுத்த விபரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேன். பத்திரத்தின் நகல் கொடுத்தேன். அசல் என்னிடம்தான் உள்ளது.

பத்திரத்தின் நகல் கொடுத்த விபரத்தையும் போலிசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் 1வது எதிரி எனக்கு 20 ரூபாய் பத்திரத்தில் ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றும், 1வது எதிரிக்கு எதிராக போலிசார் விசாரணையில் சொல்லாத விபரத்தை நீதிமன்றத்தில் முதன்முறையாக கூறி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை (2 வது எதிரி தரப்பில்)**

1வது எதிரி அப்பாட்மெண்ட்டில் ஒரு லேடி குடியிருப்பதாகவும், அவர் கோர்ட்டில் வேலை செய்வதாகவும், அவர்ஜட்ஜ்க்கு உறவினர் என்றும் நான் கூறியுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1வது எதிரி சொல்லி தெரியும். 1வது எதிரியிடம் நான் கொடுத்த பணத்தை நான் இதுநாள் வரை கேட்டுக்கொண்டு உள்ளேனா என்றால் வழக்கு போடுவதற்கு முன்புவரை கேட்டேன். வழக்கு போட்டபிறகு கேட்கவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தபோது 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் நான் கூறியுள்ள விபரங்களான " 1வது எதிரி அப்பாட்மெண்ட்டில் கோர்ட்டில் வேலை செய்யும் ஒரு லேடி குடியிருப்பதாகவும், அவர் ஜட்ஜ்க்கு உறவினர் என்றும், அவர் திருவாரூர் கோர்ட்டில் வேலை செய்வதாகவும், நான் கொடுத்த பணத்தை 1வது எதிரி அந்த லேடியிடம் கொடுத்துள்ளதாகவும், அதனை அவர் ஜட்ஜியிடம் கொடுத்துள்ளதாகவும் " கூறியுள்ள சங்கதிகளை போலிசார் விசாரித்தபோது சொன்னேன். மேற்படி விபரங்களை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றும் நீதிமன்றத்தில்முதன்முறையாக கூறி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Previous Examination : Date : 03.11.2020

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு மே மாதம் 26-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 45 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமச்சந்திரன் | வயது | 25 /2022 |
| தகப்பனார் பெயர் | ராஜேந்திரன் | ஜாதி | |
| தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | திருவாரூர் |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூரில் வசித்து வந்து சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். எனது மாமா ராஜா என்பவர் கூட்டுறவு சொசைட்டியில் வேலை பார்க்கிறார். அவர் 1வது எதிரிக்கு உறவினர் ஆவார். அவர் மூலம் 1வது எதிரியை தெரியும். 2 வது எதிரியை தெரியாது- 1வது எதிரி எனது மாமா மூலம் கோர்ட்டில் ஆபீஸ் அஸிஸ்டெண்ட் வேலை வருகிறது- அதற்கு ரூ.2 லட்சம் செலவாகும் என எனது மாமா மூலம் சொல்லி, டாக்குமெண்ட்டும், பணம் ரூ.1லட்சம் முதலில் வேண்டும் என்றும் சொன்னார்கள். அதன்படி பிப்ரவரி மாதம் 2018-ல் 1வது எதிரி வீட்டிற்கு போய் ரூ.1 லட்சம் பணம் மற்றும் சான்றிதழ்களின் நகல்களை கொடுத்து வந்தேன். அதன் பிறகு 2 மாதமாகியும் வேலை வராததால் நானும், எனது மாமாவும் பலமுறை கேட்டும், பணம்கொடுக்கவில்லை. இறுதியாக எச்.டி.எப். வங்கி காசோலை ரூ.1லட்சத்திற்கு எழுதி கொடுத்தார். தேதி போடாமல் கொடுத்தார். நான் சொல்லும்போது தேதி போட்டு வசூலுக்கு போடுமாறு சொன்னார். அதன்பின்னர் டி.சி.பி. ஆபீஸிலிருந்து எனக்கு போன் செய்து நேரில் வரச்சொன்னார்கள். நான் போய் பார்த்தபோது சுமார் 82, 83 நபர்கள் பணம் கொடுத்த விபரம் தெரியவந்தது. என்னை சாட்சியாக போட்டுக்கொள்வதாக சொன்னார்கள். போலிசார் என்னிடம் விபரங்களை கேட்டு விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (1வது எதரி தரப்பில்)**

1வது எதிரி காலனியில் கோர்ட்டில் வேலை செய்யும் லேடி குடியிருப்பதாகவும், அவர் மூலம் வேலை வாங்கி தருவதாகவும் 1வது எதிரி சொன்னார். 1வது எதிரி பணத்தை வாங்கிய பின்னர் நான் பலமுறை கேட்டும் சரியாக பதில் இல்லாததால் நான் ஏமாந்த விபரம் தெரியவந்தது.. பணத்தை திரும்ப தருமாறு கேட்டபோது

1 எதிரி செக் கொடுத்தார். எப்போது 1 எதிரி செக் கொடுத்தார் என்றால் அக்டோபர் 2018-ல் செக் கொடுத்தார். செக்கில் தேதி குறிப்பிடவில்லை. செக் பெற்றவுடன் எனக்கு பணம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை இருந்தது என்றால் சரிதான். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 2019 ஆரம்பத்தில்விசாரித்தார்கள். தேதி ஞாபகம்இல்லை. நான் போலிஸ் ஸ்டேசனுக்கு போகவில்லை என்றும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் வாழக்கிற்காக கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 எதிரி எனக்கு காசோலை கொடுத்து வசூலுக்கு செலுத்தி பணத்தை பெற்றுக்கொள்ள சொன்னநிலையில் நான் காசோலையை வசூலுக்கு போடாமல் அலட்சியமாக இருந்துவிட்டு 1வது எதிரியாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2 ம் எதிரி தரப்பில் )**

1வது எதிரி காலனியில் கோர்ட்டில் வேலை செய்யும் ஒரு லேடி இருப்பதாகவும், அவர் மூலம் வேலை வாங்கி தருவதாக சொன்னதாகவும் நான் 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1வது எதிரி சொல்லிதான் தெரியும். 1வது எதிரி தந்த தவறான தகவலை நம்பி நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்கள் போலிசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு போலிசார் விசாரித்தபோது சொல்லவில்லை என்றும், தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Previous Examination : Date : 03.11.2020

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு மே மாதம் 26-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா.46 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மார்கிரேட் சாந்தி | வயது | 38 /2022 |
| கணவர் பெயர் | ஸ்டீபன் | ஜாதி | |
| தொழில் | தனியார் கடை, | மதம் | |
| ஊர் | திண்டுகல் | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திண்டுகல் மாவட்டம், உண்டாரப்பட்டியில் வசித்து வந்து தனியார் பேன்ஸி கடையில் வேலை செய்து வருகிறேன். 1வது எதிரி சக்திவேலை தெரியும். 2 வது எதிரியை தெரியாது. எனது கணவர் திண்டுகல் மாவட்டம், தாடிகொம்பு என்ற ஊரில் ஸ்டுடியோ வைத்துள்ளார். எனது கணவருக்கு மன்னார்குடியில் ஸ்டுடியோ வைத்துள்ள ரமேஷ் என்பவரை தெரியும். எனது குடும்பம் கஷ்டத்தில் இருந்ததால் எனக்கு வேலை இருந்தால் சொல்லுமாறு ரமேஷிடம் எனது கணவர் சொல்லியிருந்தார். ரமேஷ் எங்களிடம் 1வது எதிரி சக்திவேல் மூலம் கோர்ட்டில் வேலை இருப்பதாக சொன்னார். அதற்கு ரூ.2 லட்சம் கட்டவேண்டும் என்று சொன்னார். முதலில்ரூ.1 லட்சம் கொடுக்கிறோம் என்று சொன்னோம். எனது கணவர் 1வது எதிரியிடம் ரூ.1 லட்சம் பணத்தை 2018 ம் வருடம் 3 வது மாதம் 1 வது எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தார். அதன்பிறகு மே மாதம்வரை வெயிட் செய்யுமாறு சொன்னார்கள். ஜுனில் வருமாறு சொன்னார்கள். வரவில்லை. நாங்கள் வட்டிக்கு பணம் வாங்கி கொடுத்திருந்ததால் பணம் திரும்ப தருமாறு 1வது எதிரியிடம் கேட்டோம்.அதற்கு 1வது எதிரி பணம் 1 லட்சம்வாங்கியதற்கு ஆவணம் மட்டும் எழுதி கொடுத்தார். இதுநாள் வரை பணத்தை திரும்ப தரவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை டி.சி.பி. ஆபீஸ் வரச்சொல்லி விசாரித்தார்கள். 1வது எதிரி பலநபர்களிடம் இவ்வாறு பணம் வாங்கி ஏமாற்றியுள்ளதாக சொன்னார்கள். 1 வது எதிரியிடம் பணம் கொடுத்தபோது என்னுடைய பையோ டேட்டாவையும் கொடுத்தேன்.

**குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில் )**

எனக்கு 1வது எதிரி சக்திவேலை ரமேஷ் என்பவர் மூலம் தெரியும். எனது கணவருக்கு ரமேஷ் என்பவர் நண்பர் ஆவார். 1வது எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் வேலையில் இருந்தாரா என

எனக்கு தெரியாது. 1வது எதிரி எங்களிடம் நேரடியாக பணம் கேட்கவில்லை என்றால் சரிதான். ரமேஷ் மூலமாக பணத்தை கொண்டுபோய் 1வது எதிரியிடம் கொடுத்தபோதுதான் 1வது எதிரியை பார்த்தோம். நான் சம்பவ காலத்தில் திண்டுக்கல்லில்தான் குடியிருந்தேன். ரமேஷ் சொன்னதை நம்பிதான் நாங்கள் பணம் கொடுத்தோம் என்றால் சரிதான். 1வது எதிரி நன்கு தெரியும் என்றும், அவர் வேலை வாங்கி கொடுத்துவிடுவார் என்றும் ரமேஷ் எங்களிடம் சொன்னார். 1வது எதிரி வேலை வாங்கி கொடுத்துவிடுவார் என நம்பியிருந்தோம். ஏமாற்றிவிட்டார். டி.சி.பி. அலுவலகம் வந்தபின்னர்தான் 1வது எதிரி ஏமாற்றிய விபரம் தெரியவந்தது. 1வது எதிரியும், 2வது எதிரியும் பலபேரிடம் பணம் வாங்கி ஏமாற்றியுள்ள விபரம் எனக்கு தெரியவந்தது என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிரி பல நபர்களிடமும் வசூல் செய்த பணத்தை 2வது எதிரியிடம் கொடுத்துள்ளதாகவும், அந்த பணத்தை 83 நபர்களுக்கும் திரும்ப கொடுக்க வேண்டும் என்பதால் உரிய முறையில் விசாரணை செய்து பணத்தை திரும்ப தரவேண்டும் என்று கேட்டு 1வது எதிரி புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் புகார் கொடுத்துள்ளாரா என்று தெரியாது. ஆனால் 1வது எதிரி அவ்வாறு ஏமாந்துவிட்டதாக சொல்கிறார். 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதால் அவருக்கு எதிராக சாட்சியமளித்தால் எனக்கு தொகை கிடைக்காது என பயந்து 1வது எதிரியை மையப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன்என்றால் சரியல்ல. 2வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க 2வது எதிரியை எனக்கு தெரியாது என பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தபோது நான் ஆவணங்களோ, பத்திரங்களோ கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை (2வது எதிரி தரப்பில்)**

நான் போலிஸ் விசாரித்தபோது 2வது எதிரியை மையப்படுத்தி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணையில் 1வது எதிரி ஏமாந்துவிட்டதாக சொன்னார் என 1வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.